# சான்பிரான்சிஸ்கோவில் - முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் … 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்க நாட்டின், கலிபோர்னியாவின் ஃப்ரீமாண்ட் நகரத்தை தலைமையிடமாக கொண்டு ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்நிறுவனம் கோவையில் பொறியியல் மையத்தை நிறுவி செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 150 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கோயம்புத்தூர் சூலூரில் குறைக்கடத்தி உபகரணங்களுக்கான தயாரிப்பு மேம்பாடு மற்றும் உற்பத்தி வசதி (Product development and manufacturing facility for Semiconductor equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், ஈல்ட் இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ரமாகாந்த் அலபதி, முதன்மை நிதி அலுவலர் பிரபாத் மிஸ்ரா ஆகியோர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (29.8.2024) அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், நோக்கியா நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 450 கோடி ரூபாய் முதலீட்டில், 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், சிறுசேரி சிப்காட்டில் உலகின் மிகப்பெரிய நிலையான நெட்வொர்க் சோதனை வசதி கொண்ட புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, நோக்கியா நிறுவனத்தின் சார்பில் தலைமை உத்தி மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (Chief Strategy and Technology Officer) நிஷாந்த் பத்ரா, நிலையான நெட்வொர்க் வணிகக் குழு தலைவர் (President – Fixed Network Business Group) திருமதி சாண்டி மோட்லி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**4. மைக்ரோசிப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

மைக்ரோசிப் டெக்னாலஜி நிறுவனமானது (Microchip Technology Inc.) ஸ்மார்ட், இணைக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான உட்பொதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு தீர்வுகளின் முன்னணி குறைக்கடத்தி சப்ளையர் ஆகும். இது பல்வேறு வகையான பயன்பாடுகளுக்கு (5G, EVகள், IOT, தரவு மையங்கள் போன்றவை) ஸ்மார்ட், இணைக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான கட்டுப்பாட்டான தீர்வுகளின் முன்னணி குறைக்கடத்தி சப்ளையர் ஆகும். (Semiconductor supplier of smart, connected and secure embedded control solutions. It develops, manufactures and sells smart, connected and secure embedded control solutions for a wide variety of applications (5G, EVs, IOT, Data Centers, Edge Community etc). Their products are microcontroller, mixedsignal, analog, and FlashIP integrated circuits).

அரிசோனாவின் சாண்ட்லர் நகரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் மைக்ரோசிப் நிறுவனம், உலகளவில் அமெரிக்கா, சீனா, தாய்லாந்து, தென் கொரியா போன்ற நாடுகளில் பல உற்பத்தி நிலையங்களை கொண்டுள்ளது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

மைக்ரோசிப் நிறுவனம் 2012 முதல் சென்னையில் இயங்கி வருகிறது. சென்னை மையம் IC வடிவமைப்பு, கணினி உதவி வடிவமைப்பு (CAD), பயன்பாடு மற்றும் மென்பொருள் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. சென்னையிலுள்ள இந்நிறுவனத்தில் சுமார் 550 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மைக்ரோசிப் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் குறைக்கடத்தி தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (R&D Center in Semiconductor Technology) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், மைக்ரோசிப் நிறுவனத்தின் மூத்த கார்ப்பரேட் துணைத் தலைவர் பேட்ரிக் ஜான்சன், கார்ப்பரேட் துணைத் தலைவர் புரூஸ் வேயர் ஆகியோர் பங்கேற்றனர்.

**5. இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்துடன் (Infinx Healthcare) புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் ஒரு முன்னோடி சுகாதார தொழில்நுட்ப நிறுவனமாகும். இந்நிறுவனம் நோயாளிகளுக்கு விரைந்து உதவக்கூடியவை, உரிமைகோரலின் துல்லியம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துகின்றன, தடைகளை அகற்றுகின்றன. (Infinx Healthcare is a pioneering healthcare technology company. They accelerate patient access, improve claim accuracy and charge integrity, reduce denials, and maximize reimbursements with the latest revenue cycle technology leveraged by specialists with Revenue Cycle Management, clinical and compliance expertise. They work closely with healthcare providers to overcome their revenue cycle challenges by leveraging automation and intelligence to increase reimbursements for patient care delivered).

இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் நிறுவனம் கலிபோர்னியாவின் சான் ஜோஸ் நகரைத் தலைமையகமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இந்நிறுவனம் தொழில் தொடங்கிட கடந்த ஜூலை மாதம் மதுரையில் உள்ள எல்காட்டில் அலுவலக இடத்தைத் தேர்வு செய்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 50 கோடி ரூபாய் முதலீட்டில் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மதுரை எல்காட்டில் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய விநியோக மையம் (Technology and Global Delivery Center) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், இன்ஃபின்க்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைமை மார்க்கெட்டிங் அலுவலர் ராதிகா டாண்டன் பங்கேற்றார்.

**6. அப்ளைடு மெட்டீரியல்ஸ் (Applied Materials) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அப்ளைடு மெட்டீரியல்ஸ் உலகின் நம்பர் 1 குறைக்கடத்தி மற்றும் காட்சி உபகரணங்கள் நிறுவனம். அவர்கள் சில்லுகள் மற்றும் மேம்பட்ட காட்சிகளை தயாரிக்கப் பயன்படும் பொருள் பொறியியல் தீர்வுகளில் முன்னணியில் உள்ளனர். (Applied Materials is World's no. 1 semiconductor and display equipment company. They are leaders in materials engineering solutions which are used to produce chips and advanced displays).

அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனமானது கலிபோர்னியாவின் சான்டா கிளாரா நகரை கார்ப்பரேட் தலைமையகமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. உலகளவில் 24 நாடுகளில் 150 நகரங்களில் செயல்பட்டு வரும் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனம் விற்பனை, சேவை மற்றும் கள ஆதரவு வசதிகளை சென்னையிலும், சேவை மற்றும் கள ஆதரவு வசதிகளை கோயம்புத்தூரிலும் அமைத்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை, தரமணியில் செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் உபகரணங்களுக்கான மேம்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் (Advanced artificial intelligence enabled technology development center for semiconductor manufacturing and equipment) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்த நிகழ்வில், அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்தின் செமிகண்டக்டர் தயாரிப்புகள் குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரபு ராஜா, துணைத் தலைவர் சதீஷ் குப்புராவ் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


---

கழக தொண்டரணி மாநிலச் செயலாளர்

## மாஸ்டர் பெ. சேகர் தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேசன் தலைவராக மீண்டும் தேர்வு!

சென்னை ஆக.31-

தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேசன் அமைப்பானது, 1994 ஆம் ஆண்டு முறையாக பதிவு செய்யப்பெற்று, மிகவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இவ்வமைப்பு ஒலிம்பிக் விளையாட்டில் உள்ள "தேக்வாண்டோ" தற்காப்பு கலையை பரப்பவும், வளர்க்கவும் உருவாக்கப்பட்டது மட்டுமல்ல, இளந்தலைமுறையினரை போதைப்பொருள் பழக்கங்களிருந்து அந்நியப்படுத்தி அவர்களின் உடலாற்றலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் உருவாக்கப் பட்டதாகும்.



"தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேசன் ஆண்டுப் பொதுக்குழு கூட்டம் மற்றும் தேர்தல் 25 8 2024 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டரணி மாநில செயலாளரும் தேக்வாண்டோ டுடே ஆசிரியருமான மாஸ்டர் பெ.சேகர் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். செயலாளராக மாஸ்டர் சே.லோகராஜ், பொருளாளராக கே.சி.முருகன் ஆகியோரும் மீண்டும் தேர்ந்தெடுக்கபட்டனர்.

எஸ்.ரேவதி, மா.ஆறுமுகம், து.சந்துரு அ.ஜெயசூர்யா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கு.தேவதாஸ், ரா.ஜெகநாதன், த.ச.எழிலின், மு.சண்முகம், மு.குமரன், ம.கணேஷ் ஆ.சந்தோஷ், ஜி.வெங்கடா சலபதி, அ.ராஜேந்திரன், ஆர்.கண்ணன் ஆகியோர் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றுள்ள தீர்மானம் வருமாறு:-

இலக்கியம், அரசியல், வசனப்புரட்சி வாயிலாக சமூகத்தில் பல சீர்திருத்தங்களை செய்து முதலமைச்சராக இருந்து ஆக்கப்பூர்வமாக சிந்தித்து செயலாற்றி தமிழகத்தை சீரிய முறையில் வடிவமைத்த சிற்பியாக திகழ்ந்து மறைந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு, "கலைகளின் இதயம் கலைஞர்" நூல் வெளியீட்டு விழாவும் திமுக தொண்டர் அணி சார்பில் நடைபெற உள்ளது. இவ்விழாவினை சிறப்பிக்கும் வகையில் தொண்டர் அணியுடன் தமிழ்நாடு யூத் அசோசியேசன் நிர்வாகிகள் அனைவரும் இணைந்து பணியாற்றுவது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் சித்தராஜகண்டிகை ஊராட்சி பாப்பன்குப்பம் கிராமத்தில் காவேரி மருத்துவமனை சார்பாக இலவச மருத்துவமனை மக்களின் பயன்பாட்டிற்காக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், மு.பாஸ்கரன், இரா.அறிவழகன், வேதாச்சலம், எஸ்.ராமஜெயம், எம்.ஜெயச்சந்திரன், சிவராமன், பிரபாகர் ரெட்டி, சந்திரசேகர், பிரபாகர் ஊராட்சி மன்ற தலைவர் ரேணுகா முரளி, துணை தலைவர் ஜோதி, முரளி, நரேந்திரன், புருஷோத்தமன், ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, சந்திரசேகர், சுஜாகர், வெற்றி, பழனி, முனுசாமி, கிஷ்டைய்யா, நடராஜன், பரத், சிவா, போண்டா சிவா, கோபி, பாலுமகேந்திரன், காவேரி மருத்துவமனை டாக்டர்.மகேஷ், டாக்டர்.கவிதா மற்றும் கம்பெனி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

## 39(அ) வட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் அறிக்கை!

சென்னை ஆக:31

39(அ) வட்ட கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி, வட்ட அவைத் தலைவர் கே.அடைக்கலம் தலைமையில் 39அ வட்டக் கழக பொதுஉறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (31.08.2024 சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் பி.எஸ்.எஸ்.தனுஷ்கோடி இல்லத்தில் நெ..223/67 திருவொற்றியூர் நெடுஞ்சாலை புதுவண்ணையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள்,மகளிர் அணி, இளைஞர் அணி, கழக மூத்த முன்னோடிகள் மற்றும் அனைத்து அணிகளும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர்

## எல்.மணிமாறன் மறைவு!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, ஆக. 31-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனின் இரங்கல் செய்தி வருமாறு:-

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர் எல். மணிமாறன் அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து நேரத்தில் அவரது அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் - செய்தி மக்கள்தொடர்பு துறையில் பல்வேறு பொறுப்புளிலும் திறம்படப் பணியாற்றியவர். அவரது மறைவால்வாடும் குடும்பத்தினருக்கும் - அவருடன் பணியாற்றிய சக செய்தி மக்கள் தொடர்புத்துறை பணியாளர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

## தாம்பரம் எம்.எஸ்.நாகூர்மீரான் மறைவு!

### எஸ்.ஆர்.ராஜா - கழகத்தினர் அஞ்சலி!

தாம்பரம், ஆக.31-

தாம்பரம் ரங்கநாதபுரம் 3 வது குறுக்கு தெருவைச் சேர்ந்த இந்திய தேசிய லீக் மாவட்ட தலைவர் என்.அக்பர் அவர்களின் தந்தையும் கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர், தளபதி ஆகியோர் மீதும் மாறாத பற்று கொண்ட எம்.எஸ்.நாகூர்மீரான் (வயது 75) அவர்கள் நேற்று காலையில் இந்து மீஷன் மருந்துவமனையில் இயற்கையெய்தினார்.

தகவலறிந்த மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அன்னாரின் இல்லத்திற்கு சென்று வணங்கி இறுதி மரியாதை செய்தார்.

உடன் 4வது மண்டலத் தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் மற்றும் இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, தடா ராஹீம், பகுதி கழக துணை செயலாளர் ஜா.ரவிகுமார், மாநகர வர்தகரணியின் துணை அமைப்பாளர் இரா. செல்வகுமார் எக்ஸ் எம்.சி., மாணவரணி அமைப்பாளர் எஸ். கார்த்திக், மாநகர சிறுபான்மை நலஉரிமை பிரிவு அமைப்பாளர் ஆர்.ஆகஸ்டின், துணை அமைப்பாளர் கூத்துஸ்கனி, பகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் எஸ். ரமேஷ், எம்.நாகராஜ், எஸ். வீஜிய், எஸ்.சினிவாசன், பி.சினிவாசன், எல்.குமார் மற்றும் கழக நிர்வாகிகளும் இந்திய தேசிய லீக் நிர்வாகிகளும், பொதுமக்களும் பெரும்திராளக கலந்து கொண்டு இறுதி மரியதை செய்தனர்.

---


அமைச்சர் ஆர்.காந்தி - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

## திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ அறிக்கை!

திருவள்ளூர், ஆக.31-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (01.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் தச்சூர்கூட்டு ரோடு எல்.கே.எஸ். திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது. தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி மாவட்ட துணைச் செயலாளர் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, மாவட்டப் பொருளாளர் எஸ்.ரமேஷ் பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகர், பி.வெங்கடாசலபதி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கின்றனர்.



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி Ex. MP கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி. ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாநில ஆதிதிராவிட நல அணித் தலைவர் க.சுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சொத்து பாதுகாப்புக் குழு துணைத்தலைவர் இ.ஏ.பி.சிவாஜி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் சி.எச். சேகர், மாநில நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஆகியோர் பங்கேற்கின்றனர். சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே. சந்திரசேகர், எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், ஆ.சத்தியவேலு. பா.சுகுமாறன். கி.வே.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், ஜான் (எ) பொன்னுசாமி, ந.பரிமளம், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், பி.முத்து, அபிராமிகுமரவேல். க.சு. தமிழ்உதயன் அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி. லோகேஷ், ஆ.வெற்றி (எ) ராஜேஷ், மு.பாஸ்கரன், என். கிருஷ்ணமூர்த்தி, கே.ஆறுமுகம், பழவை.முகமது அலவி, ப.தனசேகர், கா.சம்பத். ஜி.சுமன், ஜி.பி.வெங்கடேசன், ஏ.கே.சம்பத்குமார், எஸ்.கோபி, வி.பி.ரவிக்குமார், டாக்டர்.வில்சன் நிலவழகன், மு.தினகரன், எம்.ஆர். ஸ்ரீதர், ஜி.ரமேஷ். எஸ். ரோஸ்பொன்னையன், டி.மணி, கே.ராஜேஷ். கோல்டு.பி.மணி, தேசராணி தேசப்பன், ஜெயலலிதா சசிதரன், ஒன்றிய குழு தலைவர், துணை தலைவர்கள் அத்திப்பட்டு.ஜி.ரவி. மாலதி குணசேகரன், தமிழ்ச்செல்வி பூமிநாதன், மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.ராமஜெயம், சாரதா முத்துசாமி. சுதாகர். சித்ரா முனுசாமி, பேரூராட்சி தலைவர்கள் துணை தலைவர்கள் சகிலா அறிவழகன், அப்துல் ரஷீத். நா.ருக்மணி மோகன்ராஜ். பி. ராஜேஸ்வரி, குமரவேல், எம். கேசவன், பா.அலெக்சாண்டர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் அனைத்து மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் தணை அமைப்பாளர்கள், அணிகளின் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக் வேண்டுகிறேன்.

முடிவில் சோழவரம் ஒன்றிய குழு தலைவர் மு. ராசாத்தி செல்வசேகரன் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வெள்ளையன் செட்டியார் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில், பள்ளி தலைமையாசிரியர் சுப்பையா முன்னிலையில் 283 மாணவ, மாணவியர்க்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் வழங்கினார். இதில் பள்ளியின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.